சொல்லியிருக்கிற கருத்துக்களையும், கண்டன குரலையும் மத்திய அரசுக்கு எடுத்துத் தெரிவித்து, அவர்கள் மூலமாக தக்க பரிகாரம் தேடுவதற்கான முயற்சிகளை இந்த அரசு மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்,

மாண்புமிகு உறுப்பினர் ஆண்டித்தேவர் அவர்கள் சொல்கிற மாதிரி தமிழகத்தைப் பொறுத்த வரையில் திருப்பிச் செய்கிற உணர்வு இல்லை. வட மாநிலத்தைச் சேர்ந்த நிறைய பேர்கள் தமிழகத்திலே இருந்து வருகிறார்கள். காழ்ப்புணர்வு கொண்டு, மொழி உணர்வின் அடிப்படையிலே அவர்களை வெளியேற்ற வேண்டுமென்ற எண்ணம் தமிழர்களுக்கு எப்போதும் கிடையாது. இந்த உணர்வு அகில இந்தியர்விற்கும் தெரிய வேண்டிய ஒன்றாக இருக்கிறது. மராட்டியத்தில் இருக்கிற தன்மைகளை உணர்ந்து மத்திய அரசு குறுக்கிட்டு அதை அடக்கி வைக்காவிட்டால், அது மாநிலத்திற்கு மாநிலம் கிளம்புமேயானால், அங்காங்கே இருக்கிறவர்களுடைய பிரச்சினைகளை மாத்திரம் கருதி, இந்தியாவையே மறந்து விடுவார்களானால், நகரை மட்டும் கவனித்து, பிற பகுதிகளை மறந்து விடுவார்களானால், எந்த ஒற்றுமையை வேண்டுமென்று நாம் விரும்புகிறோமோ அந்த ஒற்றுமை பாழ்பட்டு விடும்.

ஆகவே தான் மன்றத்திலே பலரும் எடுத்துச் சொன்னக் கருத்துக்கள் மனித உணர்வின் அடிப்படையிலே, இந்திய அரசும் மகாராஷ்டிர அரசும் தங்களுடைய கருத்துக்களை மாற்றிக் கொள்வதற்கு பயன்படும் என்று நான் கருதுகிறேன். அந்த வகையிலே எடுத்துச் சொன்ன கருத்துக்கள் மிக மிகப் பயன்படும். இந்த பிரச்னையில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஈடுபட்டுள்ளார்கள் என்று சொல்லி, வேண்டிய நடவடிக்கைகளை இந்த அரசு எடுக்கும் என்று உறுதிமொழியாகக் கூறி, இந்த அவையில் பேசவேண்டிய கருத்துக்கள் பேச வேண்டிய அளவிற்கு பேசியிருப்பதன் காரணமாக மேற்கொண்டு அவையை ஒத்தி வைத்து பேசத் தேவையில்லை என்று கூறி முடித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பின் பேரவையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து இத்தீர்மானம் குறித்து விவாதிக்கத் தேவை இல்லையென்பதால், இதற்கு இசைவு மறுக்கப்பெறுகிறது.

3. அரசினர் சட்ட முன்வடிவுகள்

(அ) தமிழ்நாடு, ஊராட்சிகள் (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1981.

மாண்புமிகு டாக்டர் இரா நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, இச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

1. அரசினர் தீர்மானம்—தொடர்ச்சி

ஆ. தமிழகத்தில் உணவு நிலைமையும், இன்றியமையாப் பொருட்களின் விலை நிலவரமும் பற்றிய வெள்ளை அறிக்கை மீது விவாதம் — தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து பேரவையில் 24-8-1981-ஆம் தேதியன்று வைக்கப்பெற்ற தமிழகத்தில் உணவு, நிலைமையும் இன்றியமையாப் பொருட்களின் விலை நிலவரமும் பற்றிய வெள்ளை அறிக்கைமீது மேலும் விவாதம், மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள், பதிலுரை.

திரு என். சங்கரய்யா: மாண்புமிகு தலைவர் அவர்களே, துணை மானியக் கோரிக்கை மீதான விவாதத்தை இன்றைக்கு ஒரு மணிக்கு முடிக்க வேண்டியிருப்பதால் நேரம் போதாது ஆகவே ஒரு மணிக்கு பிறகு வெள்ளை அறிக்கை மீதான பதிலுரையை வைத்துக் கொள்ளலாம்.

திரு அ. ரகுமான்கான்: மன்றத்தினுடையத் தலைவர் அவர்களே, துணை மானியக் கோரிக்கையில் விவாதத்தை முன்னால் வைத்துக் கொண்டு வெள்ளை அறிக்கை மீதான விவாதத்தை அதற்கு பின்னால் எடுத்துக் கொள்ளலாம். ஏனென்றால் இரண்டுக்குமே மாண்புமிகு நாவலர் அவர்கள்தான் பேச வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: முதலில் வெள்ளை அறிக்கையில் பதிலுரயை முடித்துக் கொண்டு, அதற்கு பின் துணை மானியக் கோரிக்கை மீது விவாதம் வைத்துக் கொள்வது என்று நேற்றைக்கே முடிவு செய்யப்பட்டிருக்கிறது, ஆகவே வெள்ளை அறிக்கையின் மீது முதலில் பதிலுரை, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

(முற்பகல் 9.50)

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, உணவு நிலைமைப் பற்றியும் விலைவாசியின் தன்மை பற்றியும் அரசின் சார்பாக வெளியிடப்பட்ட கருத்துக்களை நியாயமான பண்போடும் பொறுப்போடும் மன்றத்தில் உள்ள ஆளும்கட்சி உறுப்பினர்களும் எதிர்க்கட்சி உறுப்பினர்களும் நல்லமுறையில் விவாதித்து, சீரிய கருத்துக்கள் பலவற்றை வழங்கி, இந்தத் துறை மேலும் செம்மையாக நடைபெற

TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்